

உள்ள மாவட்ட மீன்வளத்துறை அலுவலர்களுடனும் நடத்தப்பட்டது. இந்நிகழ்வின்போது தேசிய மீன் வளர்ப்போர் தினத்தின் முக்கியத்துவம் பற்றி பண்ணையாளர்கள் மத்தியில் விரிவுரை செய்யப்பட்டது. மேலும் மீன் பண்ணையாளர்கள் மற்றும் மீனவர்களுக்கு மீன் வளர்ப்பின் போதும் மற்றும் கடல் மீன் பிடிப்பின்போதும் கோவிட் -19 தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் விழிப்புணர்வு பற்றியும் விரிவுரை செய்யப்பட்டது. அதுமட்டுமல்லாது தற்போது நடைமுறையில் உள்ள மீன் வளர்ப்போர் மற்றும் கடல் மீன் பிடி தொடர்பான மத்திய மற்றும் மாநில அரசுகளின் மீன்வளத்துறை தொடர்பான திட்டங்கள் மற்றும் அவற்றின் நிதியுதவி, மான்யம் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. மீன் பண்ணையாளர்கள் மற்றும் மீனவர்கள் காணொளிக் காட்சி மூலம் அனைத்து மீன் வளத்துறை அதிகாரிகளுடன் விரிவாக கலந்துரையாடினர்கள். காட்டுப்பாக்கம் வேளாண்மை அறிவியல் நிலையம் முனைவர் கி.சிவகுமார், உதவிப்பேராசிரியர் மீன்வளம் அவர்கள் இந்நிகழ்வு தொடர்பான தொழில்நுட்ப உரைகளை மேற்கொண்டார். மேலும், மீன் தொட்டிகள் மற்றும் குளங்களில் மீன் இருப்பு செய்தல், அவற்றை குளத்து நீரின் சூழலுக்கிணங்கல் முறையையும் செயல்முறை விளக்கம் செய்யப்பட்டது. இந்நிகழ்வில் மொத்தமாக 16 பயனாளிகள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

## வாட்ஸ் ஆப் கைபேசி மூலம் வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனைகள்



வேளாண் அறிவியல் நிலையம், காட்டுப்பாக்கத்தில் செயல்பட்டுவரும் மாவட்ட வானிலை முன்னறிவிப்பு பிரிவானது காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட மற்றும் வட்டார அளவிலான வானிலை முன்னறிவிப்பு மற்றும் வானிலை சார்ந்த வேளாண் தொழில்நுட்ப ஆலோசனைகளை பிரதிவாரம் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் வழங்கி வருகிறது. விவசாயிகள் மாவட்ட அளவிலான முன்னறிவிப்பு வானிலை சார்ந்த வேளாண் தொழில்நுட்ப ஆலோசனைகளை தகவல்களை மேக்தூத் என்ற கைபேசி செயலி வழியாகவும் வட்டார அளவிலான தகவல்களை கைபேசி பகிரி வழியாகவும் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதற்காக வேளாண் அறிவியல் நிலையம் பல்வேறு வாட்ஸ்ஆப் குழுக்களை நிறுவி 739 விவசாயிகளை குழுக்களாக இணைத்து வட்டார அளவிலான ஆலோசனை தகவல்கள் வழங்கி வருகிறது. இத்திட்டத்தினைப் பற்றி விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த மாவட்ட வானிலை முன்னறிவிப்பு பிரிவு சார்பில் சித்தாமூர் மற்றும் வாலாஜாபாத் வட்டாரங்களில் இரு விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டது. 26.08.2020 அன்று சித்தாமூர் வட்டாரத்தில் நடைபெற்ற முகாம்களில் வானிலை சார்ந்த பயிர் தேர்வு மற்றும் பயிர் மேலாண்மை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இந்த முகாமில் பவுஞ்சூர் வட்டார தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் திரு.சிவகுமார் கலந்துகொண்டு விவசாயிகளிடம் கலந்துரையாடினார். 19.09.2020 அன்று வாலாஜாபாத் வட்டம் புள்ளலூர் கிராமத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு முகாமில் பூச்சி மற்றும் நோய் தாக்கத்திற்கும், வானிலைக்கும் உள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இம்முகாம்களில் பல்வேறு விவாயிகள் கலந்துகொண்டு தங்கள் கைபேசி எண்களை பதிவு செய்து பயனடைந்து வருகிறார்கள்.

## நிலையத்தில் விற்பனைக்குரியவை

1. வேலிமசால் விதை -ரூ.520/கிலோ
2. தீவனச்சோளம் விதை (கோ.எப்.எஸ். 29) ரூ.400/-
3. கோ - 3, கோ - 4, கோ - 5, புல்கரணைகள் - ரூ.500/1000எண்ணிக்கை
4. பனீர் அழுத்தும் கருவி - ரூ.3250/-
5. அழகுச் செடிகள் - ரூ.20/-
6. குழித்தட்டு காய்கறி நாற்றுகள் - ரூ.100/-
7. மண்புழு உரம் - ரூ.10/கிலோ
8. பஞ்சகவ்யா - ரூ.100/லிட்டர்
9. சிப்பிக்காளான் - ரூ.250/கிலோ
10. கேவிகே சத்துமாவு ரூ. 200/ கிலோ
11. நேரடி நெல் விதைப்புக்கருவி ரூ.4800/-
12. விந்தை பெருச்சாளிப்பொறி -ரூ.700/-
13. களையெடுக்கும் கருவி ரூ.1600/-
14, மாடித்தோட்டத்திற்கான பைகள் மற்றும் உரங்கள் ரூ.90 - 130/-
14. தேனீ வளர்ப்பு பெட்டி ரூ.3300/-
15. அசோலா - ரூ.20/ கிலோ
16. மூலிகைச் செடிகள்
17. அலங்கார மீனினங்கள்
18. கோழிக்குஞ்சுகள்
19. இனக்கவர்ச்சிப் பொறிகள்
20. தென்னைமரம் ஏறும் கருவி ரூ.3300/-
21. கேழ்வரகு ரூ.35/கிலோ

மேலும் விபரங்களுக்குத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
வேளாண்மை அறிவியல் நிலையம்
காட்டுப்பாக்கம், காட்டாங்குளத்தூர் (அஞ்சல்)
காஞ்சிபுரம் மாவட்டம் – 603 203
தொலைபேசி : 044 – 2745 2371
மின்னஞ்சல் : kvk-kattupakkam@tanuvas.org.in

வேளாண்மை அறிவியல் நிலையம், காட்டுப்பாக்கம் – 603 203 நூல் அஞ்சல்

பெறுநர்
திரு/திருமதி ____________________

அனுப்புநர்
பேராசிரீயர் மற்றும் தலைவர், வேளாண்மை அறிவியல் நிலையம்
காட்டுப்பாக்கம், காட்டாங்குளத்தூர் (அஞ்சல்), காஞ்சீபுரம் மாவட்டம் -603 203



தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமம்
வேளாண்மை அறிவியல் நிலையம், காஞ்சிபுரம்
ICAR - KRISHI VIGYAN KENDRA, KANCHEEPURAM

# செய்தி மடல் NEWS LETTER

மலர்: 13 | ஜுலை – செப்டம்பர் 2020 | மடல்: 3

சிறப்பாசிரியர்
முனைவர் நி.கு. சுதீப் குமார்
விரிவாக்கக்கல்வி இயக்குநர்

ஆசிரியர்
முனைவர் ப. இரா. நிஷா
பேராசிரியர் மற்றும் தலைவர்

துணை ஆசிரியர்
முனைவர் மா.விமலாராணி
இணைப் பேராசிரியர் (மனையியல்)

ஆசிரியர் குழு
முனைவர் மா. சித்தார்த்
முனைவர் தி. செல்வராஜ்
முனைவர் க. தேவகி
முனைவர் காயத்ரி சுப்பையா
முனைவர் கி. சிவகுமார்

## வேளாண்மை அறிவியல் நிலையத்தில் தேசிய ஊட்டச்சத்து மாத விழா - போஷான் மா 2020





காஞ்சிபுரம் மாவட்ட வேளாண்மை அறிவியல் நிலையத்தால் தேசிய ஊட்டச்சத்து மாதம் - செப்டம்பர் 2020 கொண்டாடப்பட்டது. மாவட்டத்தில் உள்ள பல்வேறு கிராமங்கள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், களப்பயிற்சிகள் மற்றும் செயல்முறை விளக்கங்கள் குறிப்பாக சத்துணவு தோட்டம் அமைத்தல், சிறு குழந்தைகள், பள்ளி குழந்தைகள், இளம் பருவத்தினர், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்களுக்கு தேவையான சரிவிகித உணவு குறைந்த செலவிலான சத்துணவு தயாரித்தல் நுண்ணூட்டச்சத்தின் முக்கியத்துவம் போன்றவை நடத்தப்பட்டது.இது சம்பந்தமான கையேடுகள் வழங்கப்பட்டது.இதன் ஒரு பகுதியாக 16.09.2020 மற்றும் 17,09,2020 ஆகிய இரு தினங்கள்நிலையத்தில் மாதிரி சத்தணவு தோட்டம் அமைக்கும் பயிற்சியை அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் சுயஉதவிக்குழு பெண்களுக்கு வழங்கப்பட்டது.. இந்நிகழ்ச்சியை காட்டாங்கொளத்தூர் குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி ஆரோக்கியமேரி அவர்கள் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். இந்நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ப.இரா.நிஷா அவர்கள் தலைமையுரையாற்றினார். இப்பயிற்சியில் சமவிகித உணவு, காய்கறி தோட்டம் அமைத்தல், பயிர் பாதுகாப்பு ஆகிய தலைப்பில் இந்நிலைய தொழில்நுட்ப வல்லுநர்கள் உரையாற்றினர். அது குறித்த கையேடுகள் வழங்கப்பட்டது. மாதிரி காய்கறி தோட்டத்தில் செயல்விளக்கப் பயிற்சி வழங்கப்பட்டது திரு. சிவக்குமார் தோட்டக்கலை உதவி இயக்குநர் பவுஞ்சூர் ஒன்றியம் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்.ஒரு வேளைக்கு தேவையான சமவிகித உணவு, சத்தான காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றின் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது. அங்கன்வாடியில் காய்கறி தோட்டம் அமைக்க காய்கறி விதைகள் வழங்கப்பட்டது. கீரைகள், காய்கறிகள் பழங்கள் கொண்ட மாதிரி தோட்டம் இந்நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியில் 102 பெண்கள் மற்றும் படப்பை மற்றும் காட்டாங்கொளத்தூர் திட்ட மேலாளர்கள் கலந்து கொண்டனர். வேளாண்மை அறிவியல் நிலைய இணைப்பேராசிரியர் முனைவர் மா.விமலாராணி அவர்கள் இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து செயல்படுத்தினார்.

## இணைய வழி கால்நடை வளர்ப்பு பயிற்சிகள்



வேளாண்மை அறிவியல் நிலையம், காட்டுப்பாக்கம் மூலம் இணையவழி கால்நடை வளர்ப்பு பயிற்சிகள் நடத்தப்பட்டது. 02.07.2020 அன்று கறவைமாடு வளர்ப்பு பயிற்சி நடத்தப்பட்டது. இதில் செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தை சார்ந்த 19 பயனாளிகள் கலந்துகொண்டு பயனடைந்தனர். இப்பயிற்சியில் இணையவழி மற்றும் கைப்பேசி வழி பயனாளிகள் பங்குபெற்று பயனடைந்தனர். மேலும் ஆகஸ்டு மாதத்தில் 04.08.2020 அன்று நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சியில் 170 பயனாளிகளும், 20.08.2020 அன்று ஒருங்கிணைந்த பண்ணையில் கோழி வளர்ப்பு குறித்த பயிற்சியில் 80 பயனாளிகளும் கலந்துகொண்டு பயனடைந்தனர். மேலும், செப்டம்பர் மாதத்தில் 05.09.2020 அன்று வெண்பன்றி வளர்ப்பு பயிற்சியில் 18 பயனாளிகளும், 24.09.2020 அன்று வெள்ளாடு வளர்ப்பு பயிற்சியில் 107 பயனாளிகளும், 29.09.2020 அன்று முயல் வளர்ப்பு பயிற்சியில் 189 பயனாளிகளும் கலந்துகொண்டு பயனடைந்தனர். இப்பயிற்சிகளில் இந்நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ப.இரா.நிஷா, உதவிப் பேராசிரியர் முனைவர் க. தேவகி மற்றும்

காட்டுப்பாக்கம், வேளாண் தொழில்நுட்ப தகவல் மைய உதவிப்பேராசிரியர் முனைவர் ம. அருள்பிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டு கால்நடை வளர்ப்பு குறித்து விரிவாக எடுத்துரைத்தனர். இந்நிகழ்ச்சி காலை 10 மணி முதல் 12.30 மணி வரை இணையவழியாக நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சார்ந்த சுமார் 538 பயனாளிகள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

## உலக வெறிநோய் தினம்-2020




வேளாண்மை அறிவியல் நிலையம், காட்டுப்பாக்கம் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை, செங்கல்பட்டு மாவட்டம் ஒருங்கிணைந்து கால்நடை மருந்தகம், நந்திவரத்தில் 28.09.2020 அன்று செல்லப்பிராணிகள் வளர்ப்போரிடையே உலக வெறிநோய் விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமில் நாய் வளர்ப்போரிடையே வெறிநோய் ஏற்படுவதற்கான காரணங்கள், அறிகுறிகள், வெறிநோய் தடுப்பு முறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும் இம்முகாமில் சுமார் 50 நாய்களுக்கு வெறிநோய் தடுப்பூசி அளிக்கப்பட்டது. நந்திவரம் - கூடுவாஞ்சேரி அரிமா சங்கம் நிதியுதவி பெற்று இம்முகாமில் கலந்து கொண்ட அனைத்து செல்லப் பிராணிகளுக்கும் (நாய்கள்) இலவசமாக வெறிநோய் தடுப்பூசி அளிக்கப்பட்டது. மேலும் செல்லப் பிராணிகளுக்கான மருந்துகள் மற்றும் இதர பொருட்களை செல்லப்பிராணி வளர்ப்போரின் வசதிக்காக கண்காட்சியை விர்பேக் மருந்து கம்பெனி மூலம் காட்சி படுத்தப்பட்டு, இம்முகாமில் கலந்து கொண்ட அனைத்து செல்லப்பிராணிகளுக்கும் இலவசமாக காது சுத்தம் செய்தல் மற்றும் சத்து மாத்திரைகள் வழங்கப்பட்டது. இந்த முகாமை காஞ்சிபுரம் கால்நடைத்துறை மண்டல இணை இயக்குனர் மருத்துவர் எஸ்.கலா தலைமை தாங்கி துவக்கி வைத்தார். செங்கல்பட்டு கோட்ட உதவி இயக்குனர் மருத்துவர் கே. புகழேந்தி மற்றும் காட்டுப்பாக்கம் வேளாண்மை அறிவியல் நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ப.இரா. நிஷா முன்னிலை வகித்து வெறிநோய் தடுப்பூசியின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தனர். இம்முகாமில் வெறிநோய் தொடர்பான விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. இம்முகாமில் முனைவர் க. தேவகி மற்றும் முனைவர் ம.அருள்பிரகாஷ், உதவிப் பேராசிரியர்கள் மற்றும் மருத்துவர் டி. ஸ்ரீநிவாசன் மற்றும் மருத்துவர் கே. கல்பனா ஆகியோரும் கலந்து கொண்டு செல்லப்பிராணிகளுக்கு வெறிநோய் தடுப்பூசி அளித்தனர். செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த 73 செல்லப்பிராணி வளர்ப்போர் இம்முகாமில் பங்கேற்று பயனடைந்தனர். மேலும் வெறிநோய் குறித்த விழிப்புணர்வு குறுஞ்செய்தி 812 பயனாளிகளுக்கு கைபேசி மூலம் அனுப்பப்பட்டது.

## பண்ணை ஆய்வுத் திட்டம் - புறக்கடைக் கோழி வளர்ப்பு

வேளாண்மை அறிவியல் நிலையம், காட்டுப்பாக்கம் 2019 - 20 புறக்கடை வளர்ப்பில் முட்டைக்கேற்ற கோழியினங்கள் மதிப்பீடு செய்தல் என்ற பண்ணை ஆய்வுத் திட்டத்திற்காக ஐந்து பயனாளிகள் திருவடிசூலம், காரணைக் காட்டூர், பேரமனூர் மற்றும் காவித்தண்டலம் கிராமங்களில் இருந்து தேர்வு செய்யப்பட்டனர். அவர்களுக்கு இரண்டு இரக கோழியினங்களான கிராமப்பிரியா மற்றும் நந்தனம் இறைச்சிக்கோழி குஞ்சுகள் (ஒரு நாள் கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டன. பயனாளிகள் இவ்விரண்டு இரக குஞ்சுகளை தங்கள் பண்ணைகளில் பராமரித்து வந்தனர். அவற்றிற்கு தேவையான தடுப்பூசிகள் அளிக்கப்பட்டன. இப்பண்ணை ஆய்வில் கிராமப்பிரியா கோழிக்குஞ்சுகளில் 92 சதவீதமும் மற்றும் நந்தனம் கோழிக்குஞ்சுகளில் 90 சதவீதமும் உயிர்வாழ் திறன் உள்ளதாக கண்டறியப்பட்டது. மேலும் கிராமப்பிரியா கோழிகளின் விற்பனை எடை 1.020 கிலோ எனவும் தீவன மாற்றுத் திறன் 2.98 எனவும் ஒரு மாத முட்டை உற்பத்தி 21 எனவும் கண்டறியப்பட்டது. நந்தனம்-3 இறைச்சிக்கோழிகள் விற்பனை வயது எடை 1.6 கிலோ எனவும் தீவன மாற்றுத்திறன் - 2.64 எனவும் முட்டை உற்பத்தி (1 மாதம் - 20 கோழிகளின் மூலம் ) 15 எனவும் கண்டறியப்பட்டது. இப்பண்ணை ஆய்வின் முடிவில் புறக்கடை வளர்ப்பில் முட்டைக்கென கிராமப்பிரியா கோழிகளும் இறைச்சிக்கென நந்தனம் 3 இறைச்சிக் கோழிகளும் ஏற்றவை என்பதும் கண்டறியப்பட்டது. இந்த ஆய்வினை தொழில்நுட்ப வல்லுநர்கள் முனைவர் ப.இரா.நிஷா பேராசிரியர் மற்றும் தலைவர் மற்றும் முனைவர் க.தேவகி உதவிப்பேராசிரியர், வேளாண்மை அறிவியல் நிலையம் காட்டுப்பாக்கம் ஆகியோர் மேற்கொண்டனர்.

## முதல்நிலை செயல்விளக்கத் திட்டம் - அங்கன்வாடி மையங்களில் சத்துணவுத் தோட்டம் அமைத்தல்



வேளாண்மை அறிவியல் நிலையம் காட்டுப்பாக்கம் மூலம் கடந்த ஆண்டு 2019-20 காட்டாங்கொளத்தூர், திருக்கழுக்குன்றம் ஒன்றியங்களில் 10 அங்கன்வாடி மையங்களில் சத்துணவுத் தோட்டம் அமைப்பதற்கு காய்கறி, கீரை விதைகள், பழக்கன்றுகள், இயற்கை உரங்கள் வழங்கப்பட்டது. குறிப்பாக அரசு பள்ளிகளில் உள்ள அங்கன்வாடி மையங்களில் பள்ளி சிறுவர்களின் மேற்பார்வையில் சத்துணவுத் தோட்டம் அமைக்கப்பட்டது. வேளாண்மை அறிவியல் நிலையம் மூலமாக சரியான இடைவெளியில் களப்பார்வை மேற்கொள்ளப்பட்டு தேவையான தொழில்நுட்பங்களான உரங்கள் இடுதல், களை எடுத்தல், நீர் பாய்ச்சுதல், அறுவடை செய்தல் போன்றவை வழங்கப்பட்டது. கத்தரி, வெண்டை, தக்காளி, பீர்க்கன், சுரைக்காய், மிளகாய், முள்ளங்கி, அரைக்கீரை, சிறுகீரை, முளைக்கீரை, சிவப்பு தண்டு கீரை முதலியன தினமும் 1 முதல் 1.5 கிலோ வரை அறுவடை செய்யப்பட்டது. இவை அங்கன்வாடி மையங்களில் உணவு தயாரிக்கும்போது பயன்படுத்தப்பட்டது. மேலும் பள்ளியிலுள்ள சத்துணவு மையங்களிலும் பயன்படுத்தப்பட்டது. இதன் மூலம் குழந்தைகள் தினமும் காய்கறி கீரைகள் உட்கொண்டனர். செலவினம் குறைந்து குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலை மேம்படுத்த வழி செய்யப்பட்டுள்ளது.



வேளாண்மை அறிவியல் நிலையம், காட்டுப்பாக்கம் - செய்தி மடல் ஜூலை – செப்டம்பர் 2020

## பயிர்களில் காட்டுப்பன்றிகளை கட்டுப்படுத்தும் முறைகள்



காட்டுப் பன்றிகளை கட்டுப்படுத்தும் முறைகள் பற்றிய முதல்நிலை செயல் விளக்கத் திட்டம் வில்லியம்பாக்கம் மற்றும் நெற்குன்றம் கிராமங்களில் 2019 20 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது. இது குறித்த தகவல்கள் கள பயிற்சிகள் மூலம் நடத்தப்பட்டது. கயிறுகள், பன்றி எண்ணெய், கந்தகம் இடுப்பொருட்களாக 10 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. செயல்முறை விளக்கம் பின்வருமாறு எடுத்துரைக்கப்பட்டது.

1) NIWAR யை மண்ணெண்ணெய் கரைலில் 3 மணி நேரம் நனைத்த பின் 3 வரிசையாக பயிரைச் சுற்றி கட்ட வேண்டும். வரிசைக்கு வரிசை 1 அடி இடைவெளி இருக்க வேண்டும்.
2) கந்தகம் மற்றும் பன்றியின் எண்ணெய் கலந்த கலவையில் தென்னை நார் கயிற்றை நனைத்து பயிரைச் சுற்றி ஒரு அடி இடைவெளியில் 3 வரிசையாக கட்ட வேண்டும்.
3) உள்ளூர் பன்றிகளின் சாணக்கரைசலை பயிரைச் சுற்றி ஒரு அடி / அகலம் மண்ணில் தெளிக்க வேண்டும்.
4) பன்றியின் உலர்ந்த சாணத்துண்டுகளை மண்பானையில் வைத்து புகை மூட்டுவதன் மூலம் பன்றியின் தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம்.
5) பயிரைச் சுற்றி மனித முடியை கொட்டி வைத்தால் பன்றியின் சுவாச குழாயில் முடி சிக்கி எரிச்சலை உண்டாக்கும். இதனால் அது கத்தும் பொழுது மற்ற பன்றிகள் அவ்விடம் அபாயம் என்று வராது.

களப்பார்வையின் போது பயிர்களின் வளர்ச்சி மற்றும் பன்றிகளின் சேதம் குறித்த தகவல்கள் சேகரிக்கப்பட்டன. இதன் மூலம் பன்றியின் எண்ணெய் மற்றும் கந்தகம் பயன்பாட்டில் சேதம் குறைந்து காணப்பட்டது. வயலில் பன்றிகளின் தாக்கம் இரண்டு வாரங்களுக்கு வராமல் இருந்தது. இதன் முலம் மகசூல் 32 சதவீதம் முந்தைய ஆண்டை விட கூடுதலாக காணப்பட்டது.

## முதல்நிலை செயல் விளக்கம் மீன் கழிவுகளை பயன்படுத்தி மண்புழு உரம் தயாரித்தல்



காஞ்சிபுரம் மாவட்டத்தில் பல்வேறு விவசாயிகள் தங்கள் வயல் மற்றும் தோட்டங்களில் மண்புழு உரத்தை பயன்படுத்தி வருகின்றனர். இந்த மண்புழு உரமானது பெரும்பாலும் மாட்டுச்சாணம் மற்றும் தாவரக் கழிவுகளை கொண்டு தயாரிக்கப்படுகிறது. இம்மாவட்டமானது கடல் மீன்வளம் மற்றும் உள்நாட்டு மீன்வளம் மூலம் மீன் உற்பத்தி செய்யப்படுகிறது. அவற்றின் விற்பனை மூலம் பெறப்படும், மீன் கழிவுகளை முறையாக பயன்படுத்தப்படுவதில்லை. எனவே இந்நிலையம் மீன் கழிவுகளை பயன்படுத்தி மண்புழு உரம் தயாரித்தல் செயல்முறை விளக்கம் 2019-20 ஆண்டில் தலா 5 மீனவர்கள் மற்றும் விவசாயக்குழு (ஒவ்வொரு விவசாய குழுவும் தலா 5 நபர்கள் கொண்டது) மூலம் நிறைவேற்றப்பட்டது. இதில் 12 அடி நீளம் 4 அடி அகலம், 2 அடி உயரம் கொண்ட தார்பாய் தொட்டி மற்றும் இதர செயல்முறை விளக்கப் பொருட்கள் ஒவ்வொரு குழுவுக்கும் வழங்கப்பட்டது. விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்கு இது தொடர்பான பயிற்சிகள் மற்றும் செயல்முறை வகுப்புகள் நடத்தப்பட்டன. இதில் வருடத்திற்கு 2480 கிலோ பெறப்பட்டது. இந்த மண்புழு உரம் விற்கப்பட்டதில் இலாபமாக ரூ.13,400 வருடத்திற்கு பெறப்பட்டது. இந்த 12 அடி நீளம் 4 அடி அகலம் , 2 அடி உயரம் கொண்ட தார்பாய் தொட்டி மூலம் இதர மண்புழு உரம் தயாரிப்பைக் காட்டிலும் கூடுதலாக 12.73 சதவீதம் உரம் பெறப்பட்டது. இத்தொழில்நுட்பமானது கோயம்புத்தூரில் அமைந்துள்ள வேளாண்மை பல்கலைக்கழகம் மூலம் 2016ல் பரிந்துரைக்கப்பட்டது.

## முதல்நிலை செயல் விளக்கம் குறுகிய பருவகால குளங்களில் பங்கேசியஸ் கெளுத்தி மீன் வளர்ப்பு



காஞ்சிபுரம் மாவட்டத்தில் குளங்கள், ஏரிகள் மற்றும் பண்ணைக் குட்டைகளில் விவசாயிகள் மீன் வளர்ப்பை மேற்கொள்கின்றனர். இம்மாவட்டத்தில் பெரும்பாலான நீர்நிலைகளில் அனைத்து மீன் வகைகளும் வளர்ப்பது பெரும்பாலான சூழ்நிலைகளில் விவசாயிகளுக்கு கடினமாக உள்ளது. எனவே இந்நீர் நிலைகளில் குறுகிய பருவகாலத்தில் வேகமாக வளரும் திறன் கொண்ட பங்கேசியஸ் கெழுத்தி மீன் வளர்ப்பு காட்டுப்பாக்கம், வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் செயல் விளக்கம் 5 விவசாயிகளின் குளங்களில் 2019-20 ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது. இதில் 25 செண்ட் பரப்பளவு கொண்ட குளங்களில் 1500 பங்கேசிஸ் கெளுத்தி மீன் குஞ்சுகள் விடப்பட்டன. இந்த செயல் விளக்கத்தில் கூடுதல் தீவனமாக கடலை புண்ணாக்கு மற்றும் அரிசி தவிடு கலவை மொத்தமாக 790 கிலோ மீன்களுக்கு உணவாக வழங்கப்பட்டது. ஆறு மாதத்தில் சராசரியாக 83.60 சதவீதம் மீன்கள் உயிருடன் எஞ்சியிருந்தன. ஒரு குறுகிய பருவகால குளத்திலிருந்து 5267 கிலோ மீன்கள் அறுவடை செய்து விற்கப்பட்டது. இதர மீன்களை ஒப்பிடும்போது பங்கேசியஸ் கெளுத்தி மீன் வளர்ப்பதன் மூலம் 25 செண்ட் குளத்திலிருந்து ரூ.1,99,980 இலாபமாக பெறப்பட்டது. இத்தொழில் நுட்பம் நாகப்பட்டினத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் மூலம் 2014ல் பரிந்துரைக்கப்பட்டது.

## தேசிய மீன் பண்ணையாளர்கள் தினம்

காஞ்சிபுரம் மாவட்டம் வேளாண்மை அறிவியல் நிலையம் காட்டுப்பாக்கம் மூலம் தேசிய மீன் பண்ணையாளர்கள் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நிகழ்வு 10,07,2020 அன்று ஆத்தூர் கிராமம் செங்கல்பட்டு பகுதியில் நடத்தப்பட்டது. இந்த நிகழ்வானது மீன்வளத்துறை காஞ்சிபுரம் மாவட்ட அலுவலர்கள் திரு. ஏ.ஜேசு ஜான் பெக்கர், மீன் வளத்துறை ஆய்வாளர் மற்றும் திருமதி எஸ்.கிரிஜா, மீன்வளத்துறை உதவி ஆய்வாளர் ஒருங்கிணைப்புடன் நடத்தப்பட்டது. இந்நிகழ்வானது காணொளிக் காட்சி மூலம் மீன்வளத்துறை உயர் அதிகாரிகளுடனும் மற்றும் அருகாமையில்